# அன்னை பூபதி
# தமிழ்க் கலைக்கூடம்

## தமிழ்மொழி
## ஆண்டிறுதிப் பரீட்சை
## ஆனி 2012

## ஆண்டு 10

பெயர்: ______________________

வகுப்பு: ______________________

புள்ளிகள்: ______________________

______________________ ______________________

(ஆசிரியர் ஒப்பம்) (பெற்றோர் ஒப்பம்)

## ① கீழ்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி (X) இடுக.

1. தமிழ்முதல் எழுத்துகளின் எண்ணிக்கை
   (அ) 216 (ஆ) 30 (இ) 247 (ஈ) 1
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

2. நானிலப் பாகுபாட்டில் முதற்பொருள் என்பது
   (அ) நிலமும் பொழுதும் (ஆ) நிலமும் நிலைத்திணையும்
   (இ) பொழுதும் நீரும் (ஈ) நிலமும் உயிரிகளும்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

3. ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறரறியாமல் உள்ளத்தில் நிகழும் தொடர்பு இலக்கியங்களில் இவ்வாறு கூறப்படும்.
   (அ) அறம் (ஆ) புறம் (இ) அகம் (ஈ) அகப்புறம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

4. ஓர் இனக்குழு வாழையடி வாழையாகத் தான் வாழ்ந்த மண்ணைவிட்டு வேறோர் ஆள்புலத்திற்குக் குடிபெயர்வது
   (அ) இடமாற்றம் (ஆ) நாடுபிடித்தல் (இ) குடியேற்றம் (ஈ) புலப்பெயர்வு
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

5. வல்லின மெய்களுக்குப் பொருத்தமான எழுத்துக் கூட்டம்
   (அ) ங், ஞ், ண் (ஆ) ய், ர், ல் (இ) க், ப், ற் (ஈ) வ், ழ், ள்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

6. மூவகை மொழிகளில் பொதுமொழிக்குச் சரியான எடுத்துக்காட்டு
   (அ) தங்கை (ஆ) பொன்னன் (இ) தங்கத்தாலி (ஈ) ஆறுவது சினம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

7. தன் நிலையில் தாழாதிருப்பதும் தாழ்வு வந்தால் உயிர் வாழாது சாவதும் எப்பண்பு?
   (அ) வீரம் (ஆ) மானம் (இ) மடமை (ஈ) அச்சம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

8. இலெமூரியாவின் மற்றொரு பெயர்
   (அ) சைபீரியா (ஆ) நைசீரியா (இ) வடகண்டம் (ஈ) குமரிக்கண்டம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

9. ஓடுநீர் என்ற சொற்றொடர்
   (அ) வினைத்தொகை (ஆ) பண்புத்தொகை
   (இ) அன்மொழித்தொகை (ஈ) உவமைத்தொகை
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

10. இமயவரம்பன் எனப் பெயர்பெற்ற அரசன்
   (அ) சோழன் (ஆ) சேரன் செங்குட்டுவன்
   (இ) நெடுஞ்சேரலாதன் (ஈ) பாண்டியன்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

11. 'நாளை பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடைபெறும்.' இச்சொல்லியம்
   (அ) செப்பு வாக்கியம் (ஆ) வினா வாக்கியம்
   (இ) விருப்புவாக்கியம் (ஈ) வியங்கோள்வாக்கியம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

12. நான் கட்டுரை எழுதினேன். '**எழுதினேன்**' என்னும் செய்வினையின் செயப்பாட்டுவினை வடிவம்
   (அ) எழுதுவேன் (ஆ) எழுதுவது (இ) எழுதினால் (ஈ) எழுதப்பட்டது
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

13. ஈரான், ஈராக் நாடுகளின் முன்னைய பெயர்
   (அ) நாவலந்தீவு (ஆ) தென்குமரி
   (இ) கைபர் கணவாய் (ஈ) மெசப்பத்தோமியா
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

14. 'கரும்புலி' என்பதைப் பிரித்து எழுதினால்
   (அ) கரும் + புலி (ஆ) கரும்பு + புலி
   (இ) கருமை + புலி (ஈ) கரும்பு + லி
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

15. சாவுக்கஞ்சாது மாந்தர் செய்யவேண்டிய முதற்கடமை
   (அ) உயிரைக் காப்பது (ஆ) நாட்டைக் காப்பது
   (இ) பணத்தைக் காப்பது (ஈ) வீட்டைக் காப்பது
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

16. 'வெள்ளம் வருமுன் அணை கட்டவேண்டும்.' இப்பழமொழியின் பொருள்
   (அ) வெள்ளத்தைத் தடு (ஆ) பின் நேரமிராது
   (இ) முன்னேற்பாடு (ஈ) ஓடவிடக்கூடாது
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

17. அடிமை வாழும் பூமியெங்கும் எது வேண்டும் என்கிறார் கண்ணதாசன்
   (அ) சண்டை (ஆ) தேர்தல் (இ) விடுதலை (ஈ) மாநாடு
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

18. இந்தியா முழுவதும் தமிழ்நாடாக இருந்தபோது அதன் பெயர்
   (அ) இலெமூரியா (ஆ) குமரிக்கண்டம் (இ) இமயம் (ஈ) நாவலந்தீவு
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

19. கோவலன், கண்ணகி கதையைச் சேரன் செங்குட்டுவனுக்குக் கூறியவர்
   (அ) தண்டமிழ்ச் சாத்தன் (ஆ) கணிகன்
   (இ) வில்லவன்கோதை (ஈ) நெடுஞ்சேரலாதன்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

20. ஒரு சொல்லின் கருத்தை முடித்து நிற்பது
   (அ) பயனிலை (ஆ) அடைமொழி (இ) எழுவாய் (ஈ) சொற்றொடர்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

**(புள்ளிகள் 20)**

**② தரப்பட்ட சொற்களை வைத்து பொருள் விளங்கச் சொல்லியங்கள் எழுதுக.**

1. அகவணக்கம்: ______________________________

______________________________

______________________________

2. பேச்சுவார்த்தை: ______________________________

______________________________

______________________________

3. இனப்படுகொலை: ______________________________

______________________________

______________________________

4. வைத்தியசாலை: ______________________________

______________________________

______________________________

5. தட்டிக்கழித்தல்: ______________________________

______________________________

______________________________

**(புள்ளிகள் 10)**

**③ பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. நோர்வே + தமிழர் = ______________________
2. அகம் + வணக்கம் = ______________________
3. வாழை + இலை = ______________________
4. ஆண்டு + இறுதி = ______________________
5. ஓய்வு + நேரம் = ______________________ **(புள்ளிகள் 5)**

## ④ இறந்தகாலத்தில் மாற்றி எழுதுக.

1. நோர்வேத் தமிழர் தைப்பொங்கல் விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடுவர்.

2. பனிகாலத்தில் சில பறவைகள் இரைதேடி, பல இடங்களுக்குப் பறந்து செல்கின்றன.

3. இப்பொழுது பெய்யும் மழையாலும் அடிக்கும் காற்றாலும் உயர்ந்த மரங்கள் விழுந்து முறிகின்றன.

4. நாம் கோடைகால விடுமுறையை மகிழ்ச்சியோடு கழிப்போம்.

5. மாதவனின் தற்போதைய கடுமையான உழைப்பின் பலனாகத் தோட்டத்து மாமரங்களெல்லாம் காய்த்துக் குலுங்கும்.

**(புள்ளிகள் 10)**

## ⑤ பாடநூல் வினாக்கள் - இலக்கண வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. கழக இலக்கியங்களில் அகம், புறம் என்று சுட்டப்படுபவை யாவை?

2. கருத்து வெளிப்பாட்டின் அடிப்படையில் வாக்கியவகைகளை எடுத்துக்காட்டுடன் தருக?

3. புலப்பெயர்வு என்றால் என்ன? ஈழத்தமிழர் ஏன் புலம்பெயர்ந்து வருகின்றனர்?

4. பெயரெச்சச் சொற்கள் 3, வினையெச்சச் சொற்கள் 3 தருக?

5. உயிர்முன் உயிர்புணர்தல் என்ற புணர்ச்சியினை எடுத்துக் காட்டுடன் ஆராய்க.

6. சிங்கள அரசுகள் தமிழருக்கு இழைத்த தீங்குகள் எவை?

7. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளை வகைப்படுத்தி எழுதுக.

**(புள்ளிகள் 15)**

## ⑥ ஒழுங்கின்றி அமைந்துள்ள சொல்லியங்களை (வாக்கியங்களை) ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள கதையாக எழுதுக.

1. கவலையுடன் அக்கம்பக்கம் பார்த்த காகம் அருகிலுள்ள கற்களைக் கண்டதும் ஒரு யோசனை தோன்றியது.
2. தாகம்தீரத் தண்ணீர் குடித்த அறிவுள்ள காகம் மகிழ்வுடன் பறந்து சென்றது.
3. காகம் ஒன்று தாகத்தால் தண்ணீர் தேடி எல்லா இடமும் அலைந்து திரிந்தது.
4. ஒவ்வொரு கற்களாகத் தனது அலகினால் எடுத்து குடத்தினுள் போட்டது.
5. கடைசியாக ஒரு குடத்தில் தண்ணீர் இருப்பதைக் கண்டது.
6. கற்கள் குடத்தினுள் விழவிழ தண்ணீர் மட்டம் மேலேறியது.
7. ஆனால், குடத்தின் அடிப்பக்கத்தில் மட்டும் தண்ணீர் இருந்ததால் அதன் வாய்க்கு எட்டவில்லை.

**(புள்ளிகள் 5)**

## ⑦ பந்தியை வாசித்துத் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பலவிதமான ஆசைகள் இருப்பது இயற்கையே. அவனுக்குக் கல்வி, மண், பொன், பொருள், பெண் எனப் பலவிதமானவற்றில் ஆசை ஏற்படுகிறது. ஆசைக்கு அளவில்லை. ஆசை வெட்கமறியாதது. சில சமயங்களில் ஆசையே மனிதன் வாழ்க்கையை அழிக்கும் ஆயுதமாக மாறிவிடுவதை நாம் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக இராமாயணத்தில் இராவணன் சீதை மீது ஆசைப்பட்டதால்தான் இலங்காபுரி அழிந்தது என்று கூறப்படுகிறது.

இக்காலத்தில் வாழும் மனிதர்களில் பெரும்பான்மையினர் பொருள் சேகரிப்பதற்கு ஆசைப்படுகின்றனர். அவர்கள் தாம் ஆசைப்பட்ட பொருட்களை வாங்குவதும் அதைக் காப்பாற்றப் பரிதவிப்பதும் காணக்கூடியதாக உள்ளது. தேவைக்காக அல்லது ஆசைக்காகப் பொருள் தேடினாலும் அதை அடைவதற்குக் கையாளும் வழிகள் அகத்தியமானதாகும் (முக்கியமானதாகும்). திருவள்ளுவர் தமது திருக்குறளில் “பொருள் இல்லாருக்கு இவ்வுலகில்லை” என்றும் “களவினாலாய பொருள் அளவிளந்து ஆவது போல கெடும்” என்று கூறி அதை நல்லவழியில் தேடினால்தான் நிலையாக நிற்கும் அல்லது அழிந்துவிடும் என நுட்பமாக விளக்குகிறார்.

இன்று உலகில் நடக்கும் அனைத்துத் தீயசெயல்களுக்கும் ஒரு கரணியமாக (காரணமாக) இருப்பது ஆசையே. மனிதனாகப் பிறந்தவனுக்கு ஆசை இருப்பது அகத்தியம். ஆசை இருந்தால்தான் அவன் தனது வாழ்வின் குறிக்கோளை அடையமுடியும். ஆனால், அந்த ஆசை பேராசையாக மாறும்போது கொலை, களவு போன்ற தீயவழிகளைக் கையாள முற்படுவான். இதனால், நாட்டில் குமூகவிரோதச் செயல்கள் கூடிக்கொண்டே பேகும். ஆத்துடன், ஆசையால் ஏற்படும் இன்பம் துன்பத்தில் முடிவடைகிறது.

1. மனிதர்களிடையே எவ்வகையான ஆசைகள் ஏற்படுகின்றன?

_______________________________________________

_______________________________________________

2. ஆசையின் தன்மை பற்றி இங்கு எப்படிக் கூறப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

3. திருவள்ளுவர் இங்கு என்ன கூறியுள்ளார்?

_______________________________________________

4. மனிதனுக்குப் பேராசை ஏற்படும் போது வரும் விளைவுகள் என்ன?

5. துன்பத்தின் எதிர்ச்சொல் இரண்டு தருக.

**(புள்ளிகள் 10)**

## ⑧ அறிவிப்புப்பலகைக்கான தகவலை 50 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

பாடசாலையில் உங்கள் கைத்தொலைபேசியைத் தொலைத்துவிட்டீர்கள். அது தொடர்பாக ஓர் அறிவித்தலை அறிவிப்புப் பலகையில் தொங்கவிடுவதற்காகத் தயார்செய்யவும்.
அந்த அறிவிப்பில் தொலைபேசி தயாரித்த நிறுவனத்தின் பெயர், தொலைந்திருக்கக்கூடிய இடம், தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம், மின் அஞ்சல், முகவரி போன்ற விடயங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

**(புள்ளிகள் 10)**

**⑨ பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து, 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. உமது பத்து ஆண்டு அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடத் தாய்மொழிக் கல்வியைக் கற்றதன் நோக்கமும், வாழ்விட குமுகாயத்திற்கு ஆற்றவிரும்பும் பணியும் பற்றி ஆராய்க.
2. மாணவர்கள் பாடசாலையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தலின் தேவைபற்றி உங்கள் கருத்தை எழுதுக.
3. உங்கள் ஓய்வுநேரப் பொழுதுபோக்கு பற்றி எழுதுக.
4. உமது பாடசாலையில் நடந்த ஆண்டு விழாபற்றி உமது கருத்தை எழுதுக.

**(புள்ளிகள் 15)**